அனுமதி அளிக்கிறேன். ஆனால், அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவைப்பற்றி பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எம். ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நேற்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு நீங்கள் வரவில்லை, என்னவென்று சொல்லுங்கள். அலுவல் ஆய்வுக் குழு பற்றி பேசக்கூடாது.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு தடுப்பணை கட்டுவது சம்பந்தமாக தஞ்சாவூர், திருவாரூர் போன்ற மாவட்டங்களில் உள்ள 500 மையங்களில் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஆறுமுகம், இன்றைக்கு அவையில் ஒரு பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறோம். நாளைக்கு ஒரு பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள இருக்கிறோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், நீங்கள் குறிப்பிடும் பிரச்சினையை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. ஆறுமுகம், உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன் அல்லவா? (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் அவையை நடத்த விடாமல் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. அழகாபுரம் மோகன்ராஜ், நீங்கள் என்னை அவையை நடத்தவிடாமல் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி நான் இன்று அவையில் எடுத்துக்கொள்ள இருக்கிறேன்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் ஐந்து மாவட்டங்களுடைய ஜீவாதார உரிமைகளை தனித்து நின்று. . . (குறுக்கீடு)*

2014 டிசம்பர் 4]

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மோகன்ராஜ், அவையை நடத்த விடாமல் இடையூறு செய்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன்ராஜ், நீங்கள் அவையை நடத்தவிடாமல் இதுபோன்று நடந்துகொள்வது முறையல்ல. (குறுக்கீடு) முக்கியமான பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கு ஏதுவாக, இன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். அவைகுறித்து பேசுவதற்கு நீங்கள் தயாராக இல்லையா? (குறுக்கீடு) முக்கியமான பிரச்சினைகள் குறித்து அவையில் விவாதம் நடத்தவேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கூறும் பிரச்சினைகள் குறித்து அவையில் விவாதிக்கப்படும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) ஒவ்வொன்றாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் எழுப்பிய பிரச்சினை, நாளை கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளப்படும்" என்ற சாதகமான பதிலைத் தாங்கள் வழங்கியிருக்கிறீர்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் எழுப்பிய பிரச்சினை நாளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், இவ்வாறு நடந்துகொள்வது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவை நடவடிக்கையை மேற்கொண்டு தொடருங்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், "மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து நாளை விவாதிக்கப்படும்" என்று கூறியிருக்கிறார்கள். எனவே, அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக்*

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2014 டிசம்பர் 4

கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடு)

3. அலுவல் ஆய்வுக் குழு முடிவு குறித்து அவையில் எழுப்புதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் நேற்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்துகொண்டீர்கள். அக்குழுக் கூட்டத்தில் உங்கள் கருத்தினைத் தெரிவித்து, குழு எடுத்த முடிவினை நீங்கள் ஏற்றுக்கொண்டு சென்றீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், இதுகுறித்து உங்களுக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், நேற்று அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவினை ஏற்றுக்கொண்டார். (குறுக்கீடு) இல்லை, அவர் நேற்று குழு எடுத்த முடிவினை ஒத்துக்கொண்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள், குழுக் கூட்டத்தில், **குழுவின் முடிவினை ஒத்துக்கொண்டு சென்றார். (குறுக்கீடு) இப்படியெல்லாம் பேசக்கூடாது. திட்டமிட்டு வந்து, அவையை நடத்தவிடாமல் இவ்வாறு செய்வது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, நீங்கள் பேசுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை மாற்ற முடியாது. (குறுக்கீடு) அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவினை மாற்ற முடியாது. (குறுக்கீடு) அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கெனவே முடிவாகிவிட்டது. அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு குறித்து, அவையில் எழுப்பி, அதனைப் பிரச்சினையாக்கக்கூடாது. அதைப்பற்றி இங்கு விவாதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) அதைப்பற்றியெல்லாம் இங்கு விவாதிக்க முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.